தாயே தமிழவளே
தமிழீழ திருமகளே
தாலாட்டு பாடுதம்மா
குழந்தை கண்ணுறங்க 2

துப்பாக்கி வேட்டுச் சத்தம் தூங்கா வைக்கும் தாலாட்டால்
தூங்கிவிட்ட பிஞ்சுகளை துடிக்கவைக்கும் ஒளி வேட்டாய்
எப்போது சொல்லு அம்மா எங்களுக்கு நல்லுறக்கம்
இன்னலுற்ற நாம் உறங்க இல்லையாகும் மனக்கலக்கம் 2

தாயே தமிழவளே

வந்த முற்று தவிக்கின்றோம் பங்களிக்க மறுக்கின்றோம்
இங்கிருக்க பயந்து பலர் எங்கேங்கோ பறக்கின்றோம்
எங்களுக்கு இம் மடியில் இமை மூடா தாகம் அம்மா
இத்தனைக்கும் காத்திருப்போம் இளையவள் உன் துயர் துடைப்போம் 2

தாயே தமிழவளே

எல்லைகளில் எங்களுக்காய் இரவுபகல் கண்விழித்து
எத்தனையோ இளம் வீரர் இமைக்காக தவமிருக்க
நல்லுறக்கம் வந்திடுமோ நாம் உயர்ந்தும் கண் துயில
நாயகியே விடுதலைக்கு நாள் குறிக்க ஏன் தயக்கம் 2

தாயே தமிழவளே

கண்களுக்கு உறக்கம் வந்தால் கனவு எல்லாம் இன் யுகமே
காணுகின்ற காட்சி உந்தன் கைவிலங்கு தெறிப்பதுவே
மண் மகளே மாதாவே மறு பிறவி இருக்குமெனில்
உன் மகவாய் தான் பிறப்பேன் உறக்கம் வர தாலாட்டு 2

தாயே தமிழவளே
தமிழீழ திருமகளே
தாலாட்டு பாடுதம்மா
குழந்தை கண்ணுறங்க 2